1968 பிப்ரவரி 16]

திரு. கே. பி. எஸ். மணி : பஞ்சாயத்து யூனியனிலோ அரசாங்கத்திலோ நடத்தப்படுகின்ற கோழிப் பண்ணைகளில் நஷ்டம்தான் வரும். காரணம் என்ன என்றால் அவர்கள் ஃபீடிங்குக்காகக் கொடுக்கிற சார்ஜ், பணியாற்றுகின்றவர்களுக்குக் கொடுக்கின்ற பணம் எல்லாம் சரியாக யூனியனிலே ஒதுக்குவது இல்லை, அப்படி ஒதுக்குவதற்கு புரவிஷன் இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் தான் நஷ்டம் வருகிறது. அது யூனியனுடைய பொறுப்பு அல்ல. முன்பு இருந்த அரசாங்கம் திட்டத்தைச் சொல்லிவிட்டார்களே தவிர போதுமான பணம் ஒதுக்கியும் பாதுகாப்புத் தந்தும் உதவி செய்யவில்லை, என்பதை அரசாங்கம் உணருமா? ஆகவே இனி மேலாவது அவற்றிற்கு எந்த அளவுக்கு பணம் ஒதுக்கமுடியுமோ ஒதுக்கி, பாதுகாப்புக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினருடைய கேள்வியிலே பஞ்சாயத்து யூனியனில் ஏன் நஷ்டம் வருகிறது என்பதற்கு சமாதானம் கூறியிருக்கிறார்கள்.

திரு. மு. ச. சிவசாமி : லட்சக்கணக்கான ரூபாய் தமிழக அரசு செலவுசெய்தும் கோழிப் பண்ணை லாபகரமாக இல்லை. இதை நிவர்த்திசெய்து லாபகரமாக நடத்தக்கூடிய முறையில் ஐரோப்பா, அமெரிக்காவில் உள்ள நாடுகளுக்கு மூன்று உறுப்பினர்களை அனுப்பி பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இன்றைய சர்க்காருடைய நிதி நிலையில் நம்முடைய சர்க்கார் அவ்வளவு செலவு செய்து அனுப்பக்கூடிய சூழ்நிலையில் இல்லை.

பொள்ளாச்சி நகருக்கு சிவில் கோர்ட்

* 56 வினா.—**திரு. இ. ராமசாமி** : மாண்புமிகு சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பொள்ளாச்சி நகரில் சிவில் கோர்ட் ஒன்று துவக்க அரசுக்கு உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. இ. ராமசாமி : பொள்ளாச்சி வட்ட பொதுமக்களிடமிருந்தும், நகராட்சி மன்றத்திலிருந்தும் சிவில் கோர்ட்டு வேண்டுமென வந்த கோரிக்கைகள் எந்தெந்த காரணத்தால் மறுக்கப் பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது பற்றிப் பொள்ளாச்சி நகராட்சியில் இருந்து வேண்டுகோள் வந்தது. அதை நாங்கள் உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பினோம். உயர்நீதிமன்றம் அங்கே ஒரு சிவில் கோர்ட் திறக்க ஆதாரம் இல்லையென்று அறிவித்திருக்கிறது.